# DEPOSITION OF WITNESS

---

**MCOP. No. 5944/2019** **DATE:19.03.2025**

| | |
|---|---|
| Deposition of Witness | : R.W.2 |
| Name | : Dr. Sivakumar |
| Father/Husband Name | : Mr. Chokkanathan |
| Age | : |
| Address | : |
| Cell Phone No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 19th day of March 2025.

---

**1வது எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரியில் உதவி பேராசிரியராக பணிபுரிகிறேன். கடந்த 8.8.2019 நாளன்று நான் அரசு ராயப்பேட்டை மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 42 வயது மதிக்கத்தக்க சாகுல் ஹமீது என்பவர் பிரேத பரிசோதனைக்காக F2 Egmore காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டேன். பிரேத பரிசோதனை 12.40 மணியளவில் தொடங்கப்பட்டது. உடல் முழுவதும் விறைப்புத் தன்மை காணப்பட்டது. காயங்கள் 1 இடது மணிக்கட்டில் சிராய்ப்புக் காயம் ஒன்று காணப்பட்டது. மேலும் அதை வெட்டிப்பார்க்கும்போது அல்னா எலும்பின் கீழ்ப்பகுதி உடைந்து காண்ப்பட்டது. காயங்கள் 2 வலது தொடையின் கீழ் பகுதியில் வீக்கம் ஒன்று காணப்பட்டது. வெட்டுத்தோற்றத்தில் தொடை எலும்பு உடைந்து இரத்தம் தோய்ந்து காணப்பட்டது. தலையை கூறாய்வு செய்யும்போது மண்டை ஓடு, தலைத்தோல், மூளையைச்சுற்றியுள்ள சவ்வு மற்றும் மூளை சாதாரண நிலையில் காணப்பட்டது. மண்டை ஓட்டின் அடிப்பகுதி சீராக இருந்தது. கழுத்தைக் கூறாய்வு செய்யும்போது நாவடி எலும்பு மூச்சுக்குழாய் உணவுக்குழாய் சீராக இருந்தது. நெஞ்சை கூறாய்வு செய்தபோது இருதயத்தில் பின் பகுதியில் 3 X 2 cm அளவில் இரத்தம் தோய்ந்து காணப்பட்டது. இடது வெண்ட்ரிக்கிள் பெரிதாகக் காணப்பட்டது. வலது பக்க அறைகள் இரத்தம் கட்டியும் இடது பக்கத்தில் காலியாகவும்

இருந்தது. வால்வுகள் சாதாரண நிலையில் இருந்தன. இருதய நாளங்களில் இடது கொரோனரி ஆட்ரிக் இடது ஆண்டீரியர் ஆட்ரியம் சுருங்கியும் பல இடங்களில் அடைத்தும் காணப்பட்டது. அயோட்டாவில் கொழுப்பு படிந்து காணப்பட்டது. நுரையீரல்கள் சாதாரண நிலையில் இருந்தன. வெட்டுத்தோற்றத்தில் இரத்தம் தோய்ந்து காணப்பட்டது. வயிற்றைக் கூறாய்வு செய்தபோது வயிற்றில் 200ml வெள்ளைநிற நீர் காணப்பட்டது. குடல்கள் மலம் அடைத்துக் காணப்பட்டது. அனைத்து உள்ளுறுப்புகளும் சாதாரண நிலையில் இருந்தன. வெட்டுத்தோற்றத்தில் இரத்தம் அடைத்துக் காணப்பட்டன. நீர்ப்பை காலியாக இருந்தது. முதுகெலும்பு மற்றும் இடுப்பெலும்பு சீராக இருந்தது. எனவே மேற்கூறிய நபர் மாரடைப்பினால் இறந்துள்ளார் என்று நான் சான்றளித்துள்ளேன். மசாஆ 5 தான் நான் அளித்த பிரேத பரிசோதனை அறிக்கை நகல் ஆகும்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஏற்கனவே விபத்து ஏற்பட்டிருந்தால் வலியினால் மாரடைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதனாலும் கையில் மணிக்கட்டு எலும்பு முறிவு ஏற்பட்டதனாலும் அதிக வலி இருந்ததால் மாரடைப்பு ஏற்பட்டது என்றால் அவ்வாறு மாரடைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

**<u>மறுவிசாரணை</u>**

சாதாரண எலும்பு முறிவு மாரடைப்பிற்கு காரணமாகாது.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:19.03.2025.

Sd/- A. Nazir Ahamed,
தலைமை நீதிபதி,
சிறுவழக்குகள் நீதிமன்றம்.

## DEPOSITION OF WITNESS

---

**MCOP. No. 5944/2019** **DATE:19.03.2025**

Deposition of Witness : R.W.3

Name : Dr. Gopinath

Father/Husband Name : Mr. Rajaram

Age :

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 19th day of March 2025.

--------------------------------------------------------------------------------------------------------

**1வது எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் சென்னை நேஷனல் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணிபுரிகிறேன். ஆவணங்களின் அடிப்படையில்தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 29.7.2019 அன்று 3.20 மணியளவில் 42 வயது மதிக்கத்தக்க சாகுல் ஹமீது என்பவரை முர்துஷா என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் பைக்கில் வந்ததாகவும் கார் வலது புற கதவு திறந்ததால் இடித்து அவர் கீழே விழுந்து காயம்பட்டதால் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவர் தன் மனைவியுடன் செல்லும்போது விபத்து நடந்தது. விபத்து 3.00 மணிக்கு நடந்துள்ளது. அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். வலியும் வீக்கமும் வலது பக்க முட்டியில் இருந்தது. சிராய்ப்பு காயம் இடது தொடையில் இருந்தது. வலியும் வீக்கமும் இடது கையில் இருந்தது. அவருக்கு முதலுதவி செய்து X-Ray செய்து பார்த்ததில் இடது கையில் எலும்பு முறிந்ததாக காணப்பட்டது. இடது காலில் எலும்பு முறிவு இருந்தது. அந்த சமயத்தில் அங்கிருந்த ஆர்த்தோ மருத்துவர் திரு. கார்த்திகேயன் அவர்கள் பரிசோதித்துவிட்டு சிகிச்சை செய்து MRI பார்க்க பரிந்துரை செய்துள்ளார். அவர் மாவு கட்டு போடவும் பரிந்துரை செய்துள்ளார். அவரை வெளிப்புற நோயாளியாக சிகிச்சை அளித்துள்ளோம். காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்றளித்துள்ளோம். அது சம்பந்தப்பட்ட மருத்துவமனை ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அது எசாஆ 2 ஆக குறியிடப்படுகிறது.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் காயம்பட்ட நபருக்கு விபத்து பதிவேட்டை நான் பதிவு செய்யவில்லை. விபத்து பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. விபத்து பதிவேட்டில் விபத்து பற்றி யார் மருத்துவரிடம் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது. கார் கதவு திறந்து விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. விபத்து ஏற்படுத்திய காரின் ஓட்டுநர்தான் அவரை மருத்துவமனையில் சேர்த்து அவராக கார் கதவு திறந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எங்கள் மருத்துவமனையில் MRI எடுக்க வசதி இல்லை. MRI எடுக்க வசதி இல்லாததால் அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து அனுப்பினோம் என்றால் எனக்குத் தெரியாது.

**<u>2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>மறுவிசாரணை-</u>** இல்லை.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:19.03.2025.

Sd/- A. Nazir Ahamed,
தலைமை நீதிபதி,
சிறுவழக்குகள் நீதிமன்றம்.